முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 987

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.06.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார தவசியே அரங்கா வாழ்க
ஓங்கார ஞானியே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 29 ம் நாள், 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் தர்ம வழிகளே
அகிலத்தை மாற்றி காத்தருளும்
வாசிவென்ற படைகளெல்லாம்
வைகயகத்தில் அரங்கன் பக்கமிருக்க
3. இருக்கவே அரங்கன் உபதேசங்கள்
ஏற்று வரும் மக்களெல்லாம் வாசி வசம் கண்டு
ஆறுமுகனார் துணைபட இனிதே
அகிலத்தை மாற்றும் சக்தியாக மாறுவர்
4. மாறுதலை அரங்கனே செய்ய இருக்க
மக்களெல்லாம் அரங்கன் பெருமை உணர்ந்தால் போதும்
வருமுலகில் உலகம் ஞானிகள் படைபெருகி
வல்லமைபட ஞானவான்கள் ஆட்சியாக மாறும்
5. தருகின்ற அரங்கன் தர்மத்தால்
தரணியே பிணி சோடை இல்லாத வாழ்வாக
ஆகவே மாற்றம் கண்டு
அகிலம் அற்புதத்தை காணும்
6. காணவே அரங்கனுள் யானிருக்க
கண்டிட வாரீர் ஓங்காரக்குடில் நோக்கி
ஞானம் பயின்று உலகோரெல்லாம்
ஞானியாவீர் அரங்கன் வழி உறுதிஉறுதி
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–